செய்தி வெளியீடு எண்:150 நாள் :11.04.2015

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்..பி.வேலுமணி அவர்கள் அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் கூட்டத்தில் மாநில அளவிலான ஊரக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்..பி.வேலுமணி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (11.04.2015) சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம், ஊரக குடியிருப்பு திட்டங்களான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், ‘‘தானே” வீடு வழங்கும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், ஊரக சாலை பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப்பணிகளையும் தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்கவும், உரிய காலக் கெடுவிற்குள் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) ஆகியோர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

**மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், சட்டமன்ற பேரவை விதி எண்110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் உள்ளிட்ட அனைத்து அறிவிப்புகளின் கீழ் அனைத்து திட்டப்பணிகளையும் விரைந்து செயல்படுத்தி, காலதாமதமின்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.**

**இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் திரு. கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள், கண்காணிப்பு பொறியாளர் (ஊரகவளர்ச்சி), மற்றும் அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) ஆகியோர் கலந்து கொண்டனர்.**

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9